துணை முதல்வராக பொறுப்பேற்ற பின்பு திண்டுக்கல் மாவட்டத்திற்கு வரும் இளைஞர்களின் எழுச்சி நாயகன் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான முறையில் வரவேற்பு கொடுக்க வேண்டும் என்று கிழக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் மாவட்ட செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. பேசினார். அருகில் கிழக்கு மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி,துணை செயலாளர்கள் ஆ.நாகராஜன், பிலால்உசேன், மார்க்கிரேட் மேரி உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

22,23. தேதிகளில் - சிவகங்கை மாவட்டத்தில் உள்ள

4 சட்டமன்றத் தொகுதிகளின் பொறுப்பாளர்கள் பங்கேற்கும் செயல்வீரர்கள் கூட்டம்

அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் அறிவிப்பு

சிவகங்கை,அக்.21-

சிவகங்கை மாவட்ட கழக செயலாளரும் கூட்டுறவுத். துறை அமைச்சருமான கே.ஆர். பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது.

கழக தலைவர் தளபதி அவர்கள் 2026 சட்டமன்றத் தேர்தலில் 200 தொகுதிகளை கைப்பற்ற வேண்டும் என்று அறிவித்துள்ளார்கள்.

அதற்கேற்ப தேர்தல் பணியினை தீவீரப்படுத்திடும் வகையில் சிவகங்கை மாவட்டத்திற்கு நான்கு சட்டமன்றத் தொகுதிகளின் பொறுப்பாளர்களாக டாக்டர் .என்.சுந்தர்ராஜ் - திருப்பத்தூர், கே.முருகவேல்-காரைக்குடி, சண்முகம்- சிவகங்கை,

பி.கே.என். போஸ் - மானாமதுரை ஆகியோரை நியமித்துள்ளார்கள்.

அதன்படி தொகுதி பொறுப்பாளர்கள் பங்கேற்கும் ஆலோசனைக் கூட்டம் கீழ்க்கண்டவாறு நடைபெற உள்ளது .

இந்தக் கூட்டத்தில் அந்தந்த சட்டமன்ற தொகுதிக்குட் பட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேருர் கழக நிர்வாகிகள். செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் வாக்குச் சாவடி முகவர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டம் நடைபெறும் விவரம் வருமாறு: -

நாளை (22.10.2024. செவ்வாய்க்கிழமை) காலை 10.மணி. மானாமதுரை சட்டமன்றத் தொகுதி, இடம்-சாந்தி முருகன் திருமண மண்டபம். மானாமதுரை-மாலை 3.00 மணி, சிவகங்கை சட்டமன்றத் தொகுதி. இடம்-ஆர்.எம்.ஆர். திருமண மகால் சிவகங்கை .

23.10.2024-புதன்கிழமை -காலை 10 மணி, திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதி, இடம் -செந்தாமணி திருமண மண்டபம்.திருப்பத்தூர்.

மாலை.3.00-காரைக்குடி சட்டமன்றத் தொகுதி, இடம்-அபூர்வ திருமண மஹால் காரைக்குடி.

இதற்கான ஏற்பாடுகளை அந்தந்த ஒன்றிய, நகர, பேருர்கழக செயலாளர்கள் ஒருங்கிணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர்-அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

திண்டுக்கல் மாவட்டத்திற்கு வருகை தரும்

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

கிழக்கு மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! மாவட்டச் செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. பேச்சு!

திண்டுக்கல், அக்.21-

துணை முதல்வராக பொறுப்பேற்ற பின்பு திண்டுக்கல் மாவட்டத்திற்கு வரும் இளைஞர்களின் எழுச்சி நாயகன் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான முறையில் வரவேற்பு கொடுக்க வேண்டும் என்று கிழக்கு மாவட்ட திமுக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும், பழனி சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார் பேசினார். 2024 பாராளுமன்ற தேர்தலில் 40க்கு 40 வெற்றி பெற்றதுபோல் 2026 சட்ட மன்ற தேர்தலில் 200 தொகுதிகளில் வெற்றி பெற்று கழகத்தலைவர் கையில் வெற்றி கனியை கொடுக்க வேண்டும் என்று ஐ.பி.செந்தில்குமார் திமுக நிர்வாகிகள் மத்தியில் பேசினார்.

திண்டுக்கல் மாவட்டம்; நத்தம் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆண்டி அம்பலம் அவர்களின் மகன் ஆண்டிச்சாமிக்

கும் ராதாதேவிக்கும் நடைபெறும் திருமணத்தை இளைஞர்களின் எழுச்சி நாயகனும், தமிழக துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமை தாங்கி நடத்த உள்ளார். துணை முதல்வராக பொறுப்பேற்ற பின்பு திண்டுக்கல் மாவட்டத்திற்கு முதல்முறையாக வர உள்ளார். அவரை சிறப்பான முறையில் வரவேற்கவும், 2026 சட்டமன்ற தேர்தலில் திமுக மாபெரும் வெற்றி பெறவும், மாவட்ட நிர்வாகிகளுக்கான ஆலோசனை நடைபெற்றது. திண்டுக்கல் மாவட்ட கழக அலுவலகத்தில் உள்ள அறிஞர் அண்ணா கூட்ட அரங்கில் நடைபெற்ற கூட்டத்திற்கு திண்டுக்கல் கிழக்கு மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி தலைமை தாங்கினார். திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக துணை செயலாளர்கள் அ.நாகராஜன், பிலால் உசேன், மார்கிரேட்மேரி, மாவட்ட பொருளாளர் கு.சத்தியமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கலந்து கொண்டு நிர்வாகிகள் மத்தியில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமக செயலாளரும், பழனி சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார் அவர்கள் பேசும்போது வருங்கால தமிழகம் இளைஞர்களின் எழுச்சி நாயகன், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திண்டுக்கல் மாவட்டத்திற்கு இன்று 21.10.2024 வருகை தர உள்ளார்கள். துணை முதல்வராக பொறுப்பேற்ற பின்பு முதன்முறையாக திண்டுக்கல் மாவட்டத்திற்கு வரும் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மாபெரும் உற்சாக வரவேற்பு கொடுக்க வேண்டும் என்றார். பேரறிஞர் அண்ணாவால் தொடங்கப்பட்ட தி.மு.க. என்ற இயக்கம் கழகத்தலைவர் தமிழக முதல்வர் திராவிட மாடல் ஆட்சி நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இளைஞர்களின் எழுச்சி நாயகன் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சீரிய செயல்பாட்டால் ஆலமரம் போல் தளைத்து இன்று விண்ணுயர்ந்து நிற்கிறது.

அடிமட்ட தொண்டனுக்கும் பாதுகாப்பாக இருப்பது திமுக என்ற பேரியக்கம் தான் அதனால்தான் இந்த இயக்கம் (திமுக) ஐந்து தலைமுறைகளை கண்டுள்ளது. 2024ம் வருடம் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் நாம் எப்படி 40க்கு 40 தொகுதிகளில் வெற்றிக் கனியை பறித்து நமது கழகத்தலைவர் கையில் கொடுத்தோமோ அதுபோல வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் 200 தொகுதிகளில் மாபெரும் வெற்றிபெற்று வெற்றிக்கனியை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கையில் வழங்க வேண்டும் என்றார். அடுத்த மாதம் நடைபெறும் வாக்காளர் பட்டியல் முகாமில் திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டு வாக்காளர் சேர்ப்பு, நீக்கம் போன்றவற்றை சிறப்பாக செய்ய வேண்டும். குறிப்பாக இளைஞர்களையும், மகளிரையும் நமது இயக்கத்திற்கு அதிகளவில் சேர்க்க வேண்டும். நமது இலக்கு 2026 சட்டமன்ற தேர்தலில் 200 தொகுதியை கைப்பற்றுவதாக இருக்க வேண்டும் என்றார். நிர்வாகிகள் கூட்டத்தில் திமுக தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இரா.தண்டபாணி, ஆத்தூர் க.நடராஜன், கனகதுரை, ஒன்றிய செயலாளர்கள் திண்டுக்கல் நெடுஞ்செழியன், வெள்ளிமலை, ரெட்டியார்சத்திரம் ப.க.சிவகுருசாமி, ஆத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் முருகேசன், மேற்கு ஒன்றிய செயலாளர் பாறைப்பட்டி ராமன், ரெட்டியார் சத்திரம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணி, கொடைக்கானல் கீழ்மலை செயலாளர் வி.எம்.ஏ.கருமலைபாண்டி, மேல்மலை செயலாளர் என்.வி.இராஜதுரை, பழனி கிழக்கு ஒன்றிய செயலாளர் க.சுவாமிநாதன்,

திண்டுக்கல் மாநகராட்சி வணக்கத்திற்குரிய மேயர் இளமதி ஜோதிபிரகாஷ், துணை மேயரும்; மாநகராட்சி செயலாளருமான ராஜப்பா, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கே.அஸ்வின் பிரபாகரன், இளைஞரணி அமைப்பாளர் மா.கணேசன், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் கன்னிவாடி பார்த்தசாரதி,

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மணலூர் மணிகண்டன், ராஜேஸ் பெருமாள், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் கே.எஸ்.அக்பர், இளங்கோவன், மூர்த்தி, சுப்ரமணி, திண்டுக்கல் பகுதி செயலாளர்கள் கிழக்கு பகுதிசெயலாளர் அ.ராஜேந்திர குமார், வடக்குபகுதி செயலாளர் சி.ஜான கிராமன், தெற்கு பகுதி செயலாளர்கள் மா.சந்திர சேகரன், மேற்கு பகுதி செயலாளர் ப.பஜ்லுல்ஹக், பழனி மாநகர செயலாளர்; ஆ.வேலுமணி, கொடைக்கானல் நகர செயலாளர் எஸ்.முகமது இப்ராஹிம், ஒட்டன்சத்திரம் நகர செயலாயர் ப.வெள்ளைச்சாமி, பேரூர் கழக செயலாளர்கள் ஸ்ரீராமபுரம் ராஜா, அகரம் இல.ஜெயபால், மாவட்ட கவுன்சிலர் சுப்புலெட்சுமி சண்முகம், உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் அடுத்த கிரிசமுத்திரம் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ–மாணவிகளுக்கு ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன் தலைமையில், மாவட்ட கழக செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. மிதிவண்டிகளை வழங்கினார். இதில் ஒன்றிய குழு தலைவர் சங்கீதா பாரி, ஊராட்சி மன்ற தலைவர் கண்ணன், பொதுக்குழு உறுப்பினர் பெருமாள், ஒன்றிய அவைத் தலைவர் ராமநாதன், மாவட்ட பிரதிநிதி சிவகுமார், ஒன்றிய பொருளாளர் தசரதன் ஒன்றிய துணை செயலாளர் கள்குமார், பொன்னம்பலம், வெங்கடேசன், ஒன்றிய குழு உறுப்பினர் டி. மேல் குப்பம் ஊராட்சி மன்ற தலைவர் குமார், ஒன்றிய துணை செயலாளர் சங்கர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

வே.கிருபாகரன் தலைமை! வேலூர் மாவட்டக் கழக கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில்

மாணவர்களுக்கு - கலைஞரின் கவிதைகள் - வசனங்கள் ஒப்பித்தல் போட்டி!

ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ.– டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. துவக்கி வைத்து சிறப்புரை!

வேலூர், அக்.21-

வேலூர் மாவட்ட தி.மு.க. கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் சார்பில், முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டுவிழா நிறைவு விழாவை முன்னிட்டு இன்று (21.10.2024- திங்கட்கிழமை), காலை 9.30 மணியளவில், வேலூர் மாவட்டக் கழக அலுவலகத்தில், கலைஞர் அவர்களின் கவிதைகள், திரைப்பட நாடக வசனங்கள் ஒப்புவிக்கும் போட்டி, பள்ளி மாணவர்களிடையே நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு மாவட்ட தி.மு.க. கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் அமைப்பாளர் வே.கிருபாகரன் தலைமை தாங்குகிறார். மாவட்ட கலை இலக்ககியப் பகுத்தறிவுப் பேரவை தலைவர் வி.கே. கருணாநிதி வரவேற்புரை யாற்றுகிறார்.

கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் மாவட்ட துணைத் தலைவர் கே.கே. செந்தில், மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஏ. வி.எம். மகாலிங்கம், சி.கல்பனா, கவிஞர் மா.வேல்முருகன், பு. மயில்வாகணன், டி.மணி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்,

வேலூர் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் எம்.பி. ஆகியோர் போட்டியை துவக்கி வைத்து, வாழ்த்துரை வழங்கி சிறப்புரை ஆற்றுகின்றனர். வேலூர் மாவட்டக் கழக அவைத்தலைவரும் தலைமை தணிக்கைக் குழு உறுப்பினருமான தி. அ.முகமது சகி,

வேலூர் மாநகர கழக செயலாளர் ப.கார்த்திகேயன், எம்.எல்.ஏ.குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் வி.அமலு எம்.எல்.ஏ., மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் மு.பாபு, வேலூர் மாநகர மேயர் ஆ.சுஜாதா, துணை மேயர் ஏ.சுனில்குமார், தலைமைக் கழக நிர்வாகிகள் டாக்டர் வி. விஜய், வேலூர் ஜி.ரமேஷ். சேர்க்காடு. கென்னடி, சி. ஞானசேகரன் எக்ஸ் எம்.எல்.ஏ,

ப.நீலகண்டன் எக்ஸ்.எம்.எல்.ஏ, நா.சுப்பிரமணி, எம் நூருல்லா, எம்.ராஜேஸ்வரி, பிரம்மபுரம்.பழனி மற்றும் சிறப்பு அழைப்பாளராக, கலை இலக்கிய

பகுத்தறிவு பேரவையின் மாநில துணை செயலாளர் சி.கோபி ஆகியோர் கலந்து கொள்கிறார்.

மாவட்டக் கழக நிர்வாகிகளான சி.நரசிம்மன், ஜி.எஸ். அரசு, எஸ்.பாண்டியன், எல். மலர்விழி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், ஆர்.பி. ஏழுமலை, ஏ.ஜி.ஆறுமுகம், வி.கே.ஆர். சுந்தரவடிவேலு, டி.விஜயகுமார், பொதுக்குழு உறுப்பினர்கள், வி.தயாநிதி, எஸ். கதிரேசன், சி.மணிமாறன், மா.பா.அன்புநிதி, ஜி. லோகநாதன், வி.டி.சிவகுமார், கே.கண்ணன், ஆலியார் அர்ஷத் அகமத், எஸ்.பி.சக்திதாசன், கே.தயாளமூர்த்தி, ஜெ. சர்மிளா, சி.சந்திர சேகரன், எஸ்.சுஜாதா, ஒன்றிய கழக செயலாளர்கள் சி.எல்.ஞானசேகரன், ஜி.குமர பாண்டியன், எல்.ரவிச்சந்திரன், எஸ்.சரவணன், கே.சீதாராமன், கள்ளூர் கே. இரவி, அ.அன்பரசன், எம். டேவிட், இரா.முருகேசன், கே.ஜனார்த்தனன், பி.வெங்கடேசன், என்.கஜேந்திரன், நத்தம் வி.பிரிதீஷ், என்.இ.சத்தியானந்தம், கே.கருணாகரன், எஸ். தணிகாசலம், சி.ரவி, ஏ.கே. முருகன்,

எஸ். சவுந்தரராஜன், ஆலியர் ஜுபேர் அமைத், ஜி.வன்னிய ராஜா, என்.பரமசிவம், ஆர்.பி.இ.சசிகுமார், ஏ. கணேஷ்சங்கர், எஸ்.தயாள் ராஜ், வி.ஜி.கே. சுந்தர்விஜி, ஆர் சத்யாமூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

முடிவில் வேலூர் மாவட்டக் கழக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் துணை அமைப்பாளர் கே.பி. கருணாநிதி நன்றி கூறுகிறார்.

முதல்வர் - துணை முதல்வருக்கு நன்றி! இராமநாதபுரம்

அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிறப்பு சிகிச்சை தொடக்கம்!

மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. அறிக்கை!

இராமநாதபுரம், அக்.21-

இராமநாதபுரம் இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் அறிக்கை வருமாறு :

இராமநாதபுரத்தில் அரசு

மருத்துவக் கல்லூரி மருத்துவமனை உள்ளது.இங்கு விபத்து மற்றும் அவசர சிகிச்சை,இதய நோய், எலும்பு முறிவு,நரம்பியல், ,மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலம் என பல்வேறு பிரிவில் சிறப்பான மருத்துவ சிகிச்சை அளித்து வருகின்றார்கள்.தலையில் ஏற்படும் காயங்களுக்கு அறுவை சிகிச்சை செய்திட அனுபவமுள்ள மருத்துவர்கள் தேவை என்பதை சட்டமன்றத்தில் முதல்வர் அவர்களிடமும் , துணை முதல்வர் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களிடம் இராமநாதபுரம் மாவட்ட மக்களின் சார்பாக கொடுக்கப்பட்ட கோரிக்கை மனுவின் அடிப்படையில் மூளை நரம்பியல் அறுவை சிகிச்சைக்கு என டாக்டர் பரணிதரன் என்ற சிறப்பு நிபுணரை நியமித்து தமிழக அரசின் சுகாதாரத் துறை உத்தரிட்டுள்ளது. இதன் மூலம் இளையான்குடி அருகே ஆளிமதுரை கிராமத்தைச் சேர்ந்த மூக்கையா மகன் தனசேகரன் இவர் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் உடற்கல்வி இயல் இறுதி ஆண்டு மாணவர்.இவருக்கு ஏற்பட்ட தலை காயத்தை மூன்று மணி நேரம் அறுவை சிகிச்சை செய்து அவரது உயிரை காப்பாற்றியுள்ளனர்.

இனிமேல் தலையில் ஏதேனும் காயம் ஏற்பட்டால் இராமநாதபுரம் மருத்துவ கல்லூரி மருத்துவமனையிலேயே அறுவை சிகிச்சை செய்திட அனைத்து வசதிகளும் செய்து தரப்படும் இதன் மூலம் இராமநாதபுரம் மாவட்ட மக்களின் சார்பாக தமிழ்நாடு முதல்வர் மு. க. ஸ்டாலின் அவர்களுக்கும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம் அவர்களுக்கும் இராமநாதபுரம் மாவட்ட மக்களின் சார்பில் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ்வாறு காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திருப்பூர் வடக்கு மாவட்டம்

திருப்பூர் வடக்கு மாநகரம், பாண்டியன் நகர் பகுதி 6வது வட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

தலைமைக் கழக அறிவிப்பு!

திருப்பூர் வடக்கு மாவட்டம், திருப்பூர் வடக்கு மாநகரம், பாண்டியன் நகர் பகுதி, 6வது வட்டச் செயலாளர் சி.கஜேந்திரன் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **கே.பி.கோபால்சாமி** (7/199ஏ, பொம்ம நாயக்கன்பாளையம், பூலுவபட்டி, திருப்பூர் 641 602.) அவர்கள் 6வது வட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறுகேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 20.10.2024

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

மதுரை மாநகர் மாவட்டம்

பெத்தானியபுரம் பகுதிக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

தலைமைக் கழக அறிவிப்பு!

மதுரை மாநகர் மாவட்டம், பெத்தானியபுரம் பகுதிச் செயலாளர் எம்.சோலை செந்தில்குமார் சரிவர கழகப் பணியாற்றாதகாரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற அவருக்குப் பதிலாக **மதி வெங்கடேஷ்** (170, பல்லவன் நகர் 6வது தெரு, பிபி சாவடி, மதுரை - 625 016.) அவர்கள் பெத்தானியபுரம் பகுதிக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 20.10.2024

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

தருமபுரி கிழக்கு மாவட்டம்

பென்னாகரம் வடக்கு-தருமபுரி மேற்கு ஆகிய ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

தலைமைக் கழக அறிவிப்பு!

தருமபுரி கிழக்கு மாவட்டம், பென்னாகரம் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஜி.சபரிநாதன் அவர்கள் சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற அவருக்குப் பதிலாக திரு.**ஆர். வீரமணி** (மாக்கனூர், பென்னாகரம், தருமபுரி மாவட்டம்) அவர்கள் பென்னாகரம் வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராகவும்;

தருமபுரி மேற்கு ஒன்றியச் செயலாளர் கே.எஸ்.ஆர். சேட்டு அவர்கள் சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற அவருக்குப் பதிலாக **டி.எல்.காவேரி**(வி.ஜெட்டிஅள்ளி, இலக்கியம்பட்டி ஊராட்சி, தருமபுரி மாவட்டம்) அவர்கள் தருமபுரி மேற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 20.10.2024

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.